# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.506/2022

| | |
|---|---|
| பெயர் : திரு. பூபதி | கிராமம் : தைலானூர் |
| த/பெ. : திரு. சேகர் | தாலூக்கா: சேலம் |
| வயது : 39 | தொழில் : |

Deposition of **DW– 1** solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 12th day of August, 2026.

**<u>முதல்விசாரணை</u>:–**

பி.வா.சா.–1ன் முதல்விசாரணை ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**<u>குறுக்குவிசாரணை</u>:–** ( வாதி தரப்பில்)

நான் வாதியிடம் 2016ம் ஆண்டில் ரூ.2 லட்சம் பெற்றதாக சொல்லியுள்ளேன் அது எந்த தேதி என்றால் அதுஎனக்கு தெரியவில்லை. மேற்படி பணத்தை நான் வாதியிடம் 2019ம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருப்பி கொடுத்துவிட்டேன். தேதி எனக்கு தெரியவில்லை. மேற்படி பணத்தை திருப்பி கொடுத்ததற்கு வாதியிடம் நான் ஆதாரம் பெற்றேனா என்றால் இல்லை. கைசாத்து நோட்டு புக்கை வாதி எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளேன் கடைசியாக எழுதிக்கொடுக்கப்பட்ட தேதி என்னவென்றால் அது எனக்கு தெரியாது. வாதியிடம் இருந்த கைசாத்து நோட்டு புத்தகம் மற்றும் எனது அசல் ஆவணத்தை 2019ம் ஆண்டிலிருந்து திரும்பி பெறுவதற்கு நான் நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் இல்லை. வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு வாதியிடம் உள் ளஎனதுஅசல் ஆவணத்தை திருப்பி தர வேண்டும் என்று ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்தேனா

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.08.12 14:48:29 +0530

I Additional District Judge,
Salem

என்றால் காவல் துறையில் புகார் கொடுத்தேன். அவர்கள் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். நான் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்று எனது பதிலுரையிலோ, முதல்விசாரணை பிரமாண பத்திரத்திலோ சொல்லவில்லை. புகார் கொடுத்த தேதி எதுவும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கடனுறுதி சீட்டிலுள்ள கையொப்பம் என்னுடையது மற்றும் எனது தகப்பனாருடையது என்றால் இல்லை. எனது பதிலுரையில், முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் வழக்கு கடனுறுதி சீட்டிலுள்ள கையொப்பங்கள் என்னுடையதோ, என்னுடைய தகப்பனாருடையதோ அல்ல என்று மறுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2016ம் ஆண்டு கடன் பெற்ற போது தான் கடனுறுதி சீட்டில் நானும், எனது தகப்பானரும் கையொப்பம் செய்து கொடுத்ததாக ஒப்புக்கொண்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு கடனுறுதி சீட்டிலுள்ள கையொப்பம் என்னுடையது மற்றும் எனது தகப்பனாருடையது என்றும்இவ்வழக்கிற்காக வேண்டி மேற்படி கையொப்பங்களை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பில் 2016ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வாதியிடம் ரூ.2 லட்சம் பெற்றுக்கொண்டு பூர்த்தி செய்யப்படாத ஒரு கடனுறுதி சீட்டில் நானும், எனது தகப்பனாரும் கையொப்பம் செய்து கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் ஆஜரானபிறகு நீதிமன்ற அனுமதியுடன் வழக்கு கடனுறுதி சீட்டை பார்வையிட்டேனா என்றால் இல்லை. எனது பதிலுரையில் மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.1.50/– வட்டியை செலுத்தியதாகவும், எனது முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.3/– வட்டியை செலுத்தியதாகவும் சொல்லியுள்ளேன். இவற்றில் எது உண்மை என்றால் ரூ.1.50/– வட்டி என்பது உண்மையாகும். நாங்கள் வாதியிடம் 01.07.2020 அன்று ரூ.8 லட்சத்தை கடனாக பெற்றுக்கொண்டுதான் வா.சா.ஆ–1 கடனுறுதி சீட்டை

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.08.12 14:48:34 +0530

I Additional District Judge,
Salem

எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி கடனுக்கு ஆதரவாகத்தான் என் பெயரிலுள்ள அசல் கிரய ஆவணத்தை வாதியிடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி கடன் தொகை ரூ–8 லட்சத்திற்கு நான் ரூ.1 கூட வட்டி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. எனவே வாதி வழக்கில் கோரியுள்ள தொகையை நாங்கள் செலுத்த கடமைப்பட்டுள்ளோம் என்றும், வாதி வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. எனது பதிலுரை மற்றும் எனது முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.08.12 14:48:39 +0530

I Additional District Judge,
Salem